# தென்னை

## 1. இரகங்கள் மற்றும் வீரிய ஒட்டு இரகங்கள்

**அ. இரகங்கள்**

1. கிழக்குக்கடற்கரை நெட்டை
2. மேற்குக்கடற்கரை நெட்டை
3. வி.பி.எம்.3 (சாதாரண அந்தமான் நெட்டை இரகத்திலிருந்து தேர்வு செய்யப்பட்டது)
4. ஏ.எல்.ஆர். (சி.என்.1) (அரசம்பட்டி நெட்டை இரகத்திலிருந்து தேர்வு செய்யப்பட்டது)
5. சௌகாட் ஆரஞ்சு குட்டை (இளநீருக்காக மட்டும்)

**ஆ. வீரிய ஒட்டு இரகங்கள்**

(சிறந்த பராமரிப்பில் வளர்க்கப்பட வேண்டியவை)

1. வி.எச்.சி.2 (இ.சி.டி X எம்.ஒய்.டி)
2. வி.எச்.சி 3 (இ.சி.டி X எம்.ஒ.டி)

இது தவிர, இ.சி.டி X சி.ஓ.டி, டபுள்யூ.சி.டி X சி.ஓ.டி மற்றும் டபுள்யூ.சி.டி. X எம்.ஓய்.டி ஆகிய நெட்டை X குட்டை ஒட்டு இரகங்களும் வேளாண் துறையில் உற்பத்தி செய்யப்படுகிறது. நல்ல நீர் வளம் உள்ள பகுதிகளில், சிறந்த பராமரிப்பில் பயிர் செய்ய ஏற்றதாக உள்ள குட்டை X நெட்டை (சி.ஓ.டி X டபுள்யூ.சி.டி) ஒட்டு இரகமும் வேளாண் துறையினரால் உற்பத்தி செயயப்படுகிறது.

## 2. புதிய இரகங்கள் மற்றும் வீரிய ஒட்டு இரகங்கள் பற்றிய விபரங்கள்

| வ. எண் | விபரம் | விஎச்சி 2 வீரிய ஒட்டு | விபிஎம் 3 | விஎச்சி 3 வீரிய ஒட்டு | ஏ.எல்.ஆர் (சி.என்) 1 |
|---|---|---|---|---|---|
| 1. | வெளியான வருடம் | 1988 | 1994 | 2000 | 2002 |
| 2. | பெற்றோர் | சிழக்கு கடற்கரை நெட்டை X மலேசியா மஞ்சள் குட்டை | அந்தமான் சாதாரண நெட்டை இரகத்திலிருந்து தேர்வு | கிழக்கு கடற்கரை நெட்டை X மலேசிய ஆரஞ்சு குட்டை | அரசம்பட்டி உயரம் இரகத்தில் இருந்து தேர்வு |
| 3. | வயது (வருடங்கள்) | 60 | 80 | 60 | 80 |
| 4. | முதல் பூத்தல் (மாதங்கள்) | 43 | 63 | 46 | 48 |
| 5. | காய் அளவு | நடுத்தரம் முதல் பெரியது. நீள்வட்டமானது | நீள்வட்டம், அடிப்பகுதி பெரியது, பெரிய காய்கள் | நடுத்தரம் முதல் பெரியது. நீள்வட்டமானது | சிறியது முதல் நடுத்தரம் நீள்வட்டமானது |
| 6. | காய்களின் விளைச்சல்/ வருடம் | 142 | 92 | 156 | 126 |
| 7. | கொப்பரை (கிராம்/காய்) | 152 | 176 | 162 | 131 |
| 8. | கொப்பரை மகசூல் ( கி / மரம் / வருடம்) | 21.5 | 16.2 | 25.2 | 16.5 |
| 9. | எண்ணெய் சத்து ( % ) | 70.2 | 70.0 | 70.0 | 66.5 |
| 10. | சிறப்பு அம்சங்கள் | அதிக காய் மகசூல், அதிக எண்ணெய் சத்து | அதிக கொப்பரை அளவு, வறட்சி தாங்கும் திறன். | அதிக காய் மகசூல், அதிக கொப்பரை மகசூல், அதிக எண்ணெய் சத்து | வறட்சி தாங்கும் திறன். |